# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.T.C. No.231 /2025** |
| Prosecution witness | : | P.W. 1 |
| List of witness | : | L.W.2 |
| Name | : | சுரேஷ் |
| Father's /Husband Name | : | பாலசுப்ரமணியம் |
| Village | : | குடவாசல் காவல் நிலையம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 58 |
| Occupation | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 16th day of April 2026. A1 died A2 to A5 present.

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் குடவாசல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2021ம் வருடம் நான் எரவாஞ்சேரி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த போது கடந்த 27.09.2021ம் தேதி அன்று காலை 11.30 மணியளவில் எரவாஞ்சேரி காவல் நிலையத்தில் பணியிலிருந்த போது உதவி ஆய்வாளர் திரு. ஆறுமுகம் என்பவருடன் நானும் தலைமை காவலர் பிரம்மா ஆகியோர்களுடன் எரவாஞ்சேரி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட பகுதியில் ரோந்து பணியில் இருந்த போது எரவாஞ்சேரி கடை தெருவில் கூட்டம் கூடுவதாக மேற்படி உதவி ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின்படி நாங்கள் அங்கு சென்று பார்த்தபோது அன்பழகன், சந்திரகாசன், பாஸ்கர், நடராஜன் மற்றும் பலர் நபர்கள் ஒன்று கூடி உழவர் விரோத சட்டங்கள் மின்சார சட்ட திருத்த மசோதா ஆகியவைகளை ரத்து செய்ய வேண்டுமென்று குறைந்த பட்ச ஆதாரா விலைக்கு சட்ட அங்கீகாரம் பெற வேண்டுமென்று நான்கு தொகுப்பு சட்டங்களை திரும்ப பெறவேண்டுமென்று மேற்படி நபர்கள் அனைவரும் 144 கு.வி.மு.ச. தடை உத்தரவை மீறி சாலையை மறித்து சாலை மறியல் செய்தார்கள். இந்த கால கட்டமானது கொரோனா வைரஸ் தாக்குதல் காரணமாக தடைஉத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. மேற்படி நபர்கள் கூட்டம் கூடி சாலை மறியல் செய்வதற்கு ஆர்பாட்டம் செய்வதற்கும் எவ்வித முன் அனுமதியோ பெறவில்லை. மேற்படி நபர்களிடம் சட்ட விரோதமாக கூட்டம் கூடி பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தியவர்களிடம் எச்சரித்தும் அதை கேளாமல் கோஷம் போட்டுவிட்டு 11.30 மணிமுதல் 11.45 வரை போராட்டம்

செய்தவர்களை கைது செய்த முற்பட்ட போது தன்னிச்சையாக கலைந்து சென்றுவிட்டார்கள். பின்னர் உதவி ஆய்வாளர் நிலையம் வந்து எதிரிகள் மீது காவல் நிலைய குற்ற எண் 493/2021 இதச சட்டப்பிரிவுகள் 143, 341, 270 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :-

நான் சொன்ன நாள் சொன்ன நேரம் சொன்ன இடத்தில் உதவி ஆய்வாளர் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது பொதுமக்கள் இடையூறு செய்ததாக யாரேனும் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. எதிரிகள் இடையூறு செய்ததாக சொல்லப்படும் இடம் மக்கள் நடமாட்டம்அதிகம் உள்ள இடம் என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் எனது உயர் அதிகாரி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் உதவி ஆய்ளவாளர் புள்ளிவிவரத்திற்காக எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.16 16:51:03 +0530

`

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.